திருமழிசை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்.

முன்னிலை: திரு.ம.வெங்கடேஷ்

**ந. க. எண். 390 / 2023 /அ1** **நாள்:06–02–2024**

**பொருள்:** சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் – திருவள்ளுர் மாவட்டம் – திருமழிசை பேரூராட்சி – திட்ட அனுமதி – மனைப்பிரிவு – திருமழிசை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட திருமழிசை வருவாய் கிராம சர்வே எண்.261/1, 263, 278/1 (ம) 278/2–ல் 6350 ச.மீ பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டு உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை –
1) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும கடிதம் எண்.Layout-1/0078/2021 நாள்.24.08.2023
2) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும PPD LO No.222/2023 நாள்.21.04.2023
3) பூவிருந்தவல்லி சார் பதிவாளர் பத்திரப் பதிவு எண்.1/4843/ 2023 நாள்.27.07.2023
4) திருமழிசை பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.347, நாள்.10.11.2023
5) உதவி பொறியாளர், திருமழிசை பேரூராட்சி (கு.இ) பணி சான்று ந.க.எண்.390/2023 நாள்.
6) தமிழ்நாடு மின்சார வாரிய ரசீது வ.எண்.0627712, நாள்.01.08.2023.
7) தொடர்புடைய அவணங்கள்.

––//––

**உத்திரவு:**

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களின் திட்ட அனுமதி PPD/LO 222/2023, நாள்.21.04.2023 மற்றும் Planing Permit ரசீது எண்.15538, நாள்.24.08.2023–ன்படி திருமழிசை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட திருமழிசை வருவாய் கிராம சர்வே எண்.261/1, 263, 278/1 (ம) 278/2–ல் மொத்த விஸ்தீர்ணம் 6350 சதுர மீட்டரில் பூவிருந்தவல்லி சார்பதிவாளர் பத்திரப் பதிவு எண்.4843/ 2023 நாள்.20.11.2023--ன்படி ஐயிட்டம் எண்.1 (சாலைகள்) – 2063 ச.மீ இடம், ஐயிட்டம் எண்.2 பொது உபயோக இடம் (உள்ளாட்சிக்கு) –24 ச.மீ இடம் மற்றும் ஐயிட்டம் எண்.3 (பொது உபயோக இடம்)--21 ச.மீ ,ஆகிய இடங்கள் தானப்பத்திரம் ஒப்படைப்பு செய்யப்பட்டு பகுதியில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 1ல் கண்டுள்ள மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும கடிதத்தில் தாங்கள் மனைப்பிரிவு மனைகளாக பிரித்து சாலைகளை மேம்படுத்த வேண்டுமென்ற நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதின் தொடர்ச்சியாக கீழ்கண்ட நிபந்தணைகளுக்கு உட்படுத்தி மனைப்பிரிவு அனுமதி கட்டணம் காலியிட மனை வரி உட்பட ரூ.54,23,000/– (ரூபாய் ஐம்பத்தி நான்கு லட்சத்து இருபத்தி மூன்றாயிரம் மட்டும்) ஆக்ஸிஸ் வங்கி வரைவோலை எண். 00092, நாள்.06.02.2024, இவ்வலுவலக செலுத்து சீட்டு எண்.913/2023–2024 நாள்.06.02.2024–ன்படி தொகை செலுத்தப்பட்டதன் தொடர்ச்சியாக மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மேலும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மனைப்பிரிவு நிபந்தனை உத்திரவுகளையும் நடைமுறைப்படுத்திட தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## ஒப்புதல் நிபந்தனைகள்

1. சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் உறுப்பினர் செயலர் அவர்கள் கடிதம் எண். Layout-1/0078/2022 நாள்.24.08.2023 மற்றும் PPD/LO No.222/2023–ன்படி வழங்கப்பட்டுள்ள 11 நிபந்தனைகளுக்குட்பட்டும், 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதிகளுக்குட்பட்டும் மற்றும் நகர் ஊரமைப்பு விதிகளுக்குட்பட்டும் மனைப்பிரிவு அமைந்திருக்க வேண்டும்.
2. மனைப்பிரிவில் சாலை ஓரங்களில் குறைந்தது 30 அடி இடைவெளியில் பலன் தரத்தக்க மரக்கன்றுகள் நடப்பட்டு Tree Guard அமைக்க வேண்டும். மனைப்பிரிவில் பெயர் பலகை அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. மனைப்பிரிவு வகைப்பாடுகளில் விடப்பட்ட பொது இடங்கள் யாவும், மனைப்பிரிவு பகுதிகள் பொதுப்பணி துறையினரது அறிவுரைகளின்படி மனைப்பிரிவு அங்கீகாரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதில் பொதுப்பணி துறையினரால் தல ஆய்வு மேற்கொள்ளப்படும் போது எவ்வித இடையூறும் இல்லாவண்ணம் வகைப்பாடு செய்யப்படுதல் வேண்டும்.
4. இந்த அனுமதி ஆணை தவறான தகவலின் பேரில் பெற்றுக்கொண்டு இருந்தாலும் அனுமதி ஆணையினை கண்டுள்ள நிபந்தனைகளையாவது அவர் மீறி நடந்தாலும் இந்த அனுமதி ஆணை ஒப்புதல் அளித்ததை ரத்து செய்யப்படும் என்பதையும் அறிவிக்கப்படுகிறது.
5. மனைப்பிரிவு ஒப்புதலில் மழைநீர் கால்வாய், பாலங்கள், சிறுபாலங்கள் மற்றும் குடிநீர் விநியோக அமைப்புக்கள் மனைப்பிரிவு நிர்மாணிக்கப்பட்டு குடியிருப்பக்கள் ஏற்படுத்தப்படுதலில் விதிமுறைகளுக்குட்பட்டு நடைமுறைகளை பின்பற்றி பின்வரும் நாளில் பேரூராட்சியால் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
6. மனைப்பிரிவில் விடப்பட்ட பூங்காக்கள் மற்றும் பொது உபயோக இடங்கள் மற்றும் மனைகள் பின்வரும் நாளில் இப்பொருள் தொடர்பான விவரங்களில் ஆக்கிரமிப்பு என கண்டறியப்பட்டால் உடனடியாக மனைப்பிரிவு ஒப்புதல் இரத்து செய்யப்படுவதோடு ஆவணங்கள் பதியப்படாமல் இருக்க சார்நிலை பதிவுத்துறைக்கு பிறிதொரு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. தங்களால் செலுத்தப்பட்டதமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான கேட்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளதால் புதிய மின் இணைப்பு, மின்கம்பங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கைகள், கண்காணிப்புக்கள் தங்களது நிறுவன வழிமுறையாக மேற்கொள்ளப்பட வேண்டுமென கண்டிப்பாய் தெரிவிக்கப்படுகிறது.
8. இந்த அனுமதி தொடர்பாக தணிக்கை தடை எழும்பட்சத்தில் தங்கள் நிறுவனத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் இவ்வுத்திரவு ரத்து செய்யப்படும்.
9. 1 முதல் 7 வரையிலான நிபந்தனைகளை பேரூராட்சியால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்போது மேற்கொள்ளப்பட்ட விவரங்கள் சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் பேரூராட்சியால் தெரிவிக்கப்படும் பணிகள் கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
10. தங்கள் நிறுவன கடிதம் 02.02.2024–ம் நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில் தெரிவித்த அனைத்தும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில் இவ்வுத்திரவு ரத்து செய்யப்படும்.

11. பேரூராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவுநீர் மேலாண்மை விதிகளின்படி உரிய நடைமுறைகளை பின்பற்றப்பட்டு விரிவான திட்ட அறிக்கையின்படி நிறுவனத்தாரால் தொகை செலுத்தப்பட்ட பின்னர் இப்பொருள் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிபந்தனைகள் மற்றும் பேரூராட்சியின் நிபந்தனைகள் முழுமையாக கடைபிடிக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்
திருமழிசை பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.

**இணைப்பு**

1. வரைபடம்
2. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிபந்தனை
3. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரசீது

**பெறுநர்**

M/s சமீரா ஃபவுன்டேஷன்ஸ் பிரைவேட் லிட்,
நெ.47, அண்ணாசாலை,
சென்னை–600 002

**நகல்–** 1) உறுப்பினர்–செயலர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம். தாளமுத்து நடராஜன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை–8 மேலான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3) தலைவர், திருமழிசை பேரூராட்சி அவர்களது மன்ற கூட்டப்பொருள் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.